# விநாயகர் சதுர்த்தி!

தொடக்கத்தின் சுடராய் எம்முள்
        தொழுதிடப் பிறக்கும் பிள்ளை!
அடக்கமாய் தமிழர் வாழ்வில்
        அங்கங்கே நிலையும் கொள்ளும்!
திடமாக, இறையைக் காட்டும்,
        திவ்விய அறிவின் வடிவம்!
மடவார்கை மஞ்சள் பிறந்து,
        மருவிலா மண்ணிலும் திகழ்ந்து,

நாடிடும் ஒவ்வொரு நிலையிலும்,
        நலமுடனெங்கள் **பிள்ளையாரே!**
கோடும் சுழியும் கொள்ளும்,
        ஓலையின் பதத்திலும் கண்டோம்!
நாடிய யெங்கள் தேசம்,
        நலிவின்றி அணைத்த **விநாயகர்!**
கூடியோர் விழாவும் ஒன்றாய்
        ஆகிட மகிழ்வோம் நிறைந்தே!

**அனைவருக்கும் விநாயகர் சதுர்த்தி வாழ்த்துக்கள்!**

அன்புடன்,

- **கவிவளவன்** ஆகிய கு.ப. அசோகன்.

31-08-2022